**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**DVC.No.14/2019**

**Deposition of DW–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. பாலாஜி | **Age** | : | 37/2026 |
| **Father's Name** | : | திரு. நாச்சியப்பன் | **Religion** | : | இந்து |
| **Village** | : | சின்னாளப்பட்டி | **Calling** | : | மென்பொறியாளர் |
| **Taluk** | : | திண்டுக்கல் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **11/06/2026.**

புகார்தாரர் ஆஜர். 1 மற்றும் 4 எதிர் மனுதாரர்கள் ஆஜர். இருதரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

**எதிர்மனுதாரர் தரப்பு முதல் விசாரணை**

1) நான் இந்த வழக்கில் ஒன்றாம் எதிர்மனுதாரர் ஆவேன். மற்ற எதிர்மனுதாரர்கள் எனது குடும்ப உறுப்பினர்கள் அவர்கள். இந்த வழக்கின் மனுதாரர் எனது மனைவி ஆவார். கடந்த 17.2.2017 ஆம் தேதி சின்னாளபட்டியில் உள்ள விஜயமஹாலில் திருமணம் நடைபெற்றது. மனுதாரரின் மாமா ஆனந்த் என்பவர் தலைமையில் திருமணம் நடைபெற்றது. திருமணம் முடிந்து இரண்டு நாட்கள் சின்னாளபட்டியில் இருந்தோம். அடுத்து 3 நாட்கள் போடிக்கு மறு வீடு சென்றோம்.

2) மீண்டும் இரண்டு நாட்கள் சின்னாளபட்டி சென்று விட்டு நான்கு நாட்கள் தேன் நிலவு சென்றோம். அதன்பிறகு 2.3.2017ம் தேதி சென்னைக்கு தனிக்குடித்தனம் சென்று விட்டோம். சென்னையில் மடிப்பாக்கத்தில் வீடு பார்த்து வைத்திருந்தோம் அங்கு தனி குடித்தனம் சென்று விட்டோம்.

திருமணத்தின் பயனாக மே மாதத்தில் கரு உண்டானது. கரு உண்டானதால் இரண்டு நாட்களில் அவர் வேலைக்கு செல்வதை நிறுத்திவிட்டார்.

3) அதன்பிறகு எனது மனைவியை கவனித்துக் கொள்வதற்காக அவரது அம்மா சென்னைக்கு வந்து 15 நாட்கள் தங்கி இருந்தார். அவர் சென்ற பிறகு எனது அம்மா வந்து இரண்டு நாட்கள் இருந்தார். அப்போது எனது அம்மா எனது மனைவியிடம் வேலைக்கு செல்லவில்லை என்பதால் சின்னாளப்பட்டியில் வந்து இரு என்று சொன்னார். அவர் சின்னாளப்பட்டிக்கு வர முடியாது என்று என்னையும் எனது அம்மாவையும் ஒருமையில் பேசினார்.

4) இந்த பிரச்சினையை அவரது மாமாவிடம் கொண்டு சென்றோம். அவர் சின்னாளப்பட்டி அழைத்து வரச் சொல்லி பஞ்சாயத்து பேசினார். பஞ்சாயத்து பேசியும் அவர் எங்களுடன் சின்னாளப்பட்டியில் இருக்க மாட்டேன் என சொல்லிவிட்டு அவரது பெரியம்மா வீட்டில் நான்கு நாட்கள் சென்று தங்கி இருந்தார். அதன்பிறகு அங்கிருந்து போடிக்கு வந்து விட்டார். அதன்பிறகு நான் எனது மனைவியை அழைத்துக் கொண்டு போடியில் இருந்து சென்னைக்கு சென்று விட்டேன்.

5) சென்னையில் இருந்த போது எனது சம்பளத்தை அவரது வங்கி கணக்கிற்கு மாற்ற வேண்டும் என்றும் அவரிடம் இருந்துதான் நான் செலவுக்கு பணம் வாங்க வேண்டும் என்று சொல்லி கண்டிஷன் போட்டார் அந்த கண்டிஷனை ஏற்றுக் கொண்டுதான் நாங்கள் சென்னையில் இருந்தோம். அதன்பிறகு என்னை எனது வீட்டில் நான் யாருடனும் பேசக்கூடாது என்று கண்டிஷன் போட்டார்.

6) செப்டம்பர் மாதம் எனக்கு பிறந்தநாள் வந்தது எனது அம்மா எனக்கு போன் மூலமாக வாழ்த்து சொன்னார் அதையும் பிரச்சனையாக்கினார். அதன்பிறகு அக்டோபர் மாதம் தலை தீபாவளிக்கு போடிக்கு வந்தோம். அதன்பிறகு நான்கு நாட்கள் இருந்து விட்டு சென்னைக்கு சென்று விட்டோம். 7.12.2017 ஆம் தேதி

வளைகாப்பு சின்னாளப்பட்டியில் நடந்தது. இரு வீட்டாரும் அங்கு இருந்தோம். அந்த வளைகாப்பு நிகழ்ச்சியில் அவர் திருமணத்தில் அணிந்திருந்த சேலை மற்றும் திருமணத்தின் போது அணிந்திருந்த நகைகளை போட்டுதான் வளைகாப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

7) திருமணமாகி என்னுடன் இருந்த அந்த ஒன்பது மாதத்தில் சென்னையில் இருந்தார் சின்னாளப்பட்டியில் நான்கு நாட்கள்தான் இருந்தார். வளைகாப்பு முடித்துவிட்டு அன்றையதினம் மதியம் ஒரு மணிக்கு அவர் போடிக்கு அவரது அப்பா வீட்டிற்கு சென்று விட்டார். அவர் போட்டு இருந்த நகைகள் அனைத்தையும் போட்டுக்கொண்டு சென்று விட்டார்.என் மனைவி போடிக்கு வந்த பிறகு நான் அவரை போடிக்கு ஒரு முறை வந்து பார்த்துவிட்டு சென்றேன். அதன்பிறகு 14.2.2018ம் தேதி நான் போடியில் அருண் மருத்துவமனையில் எங்களுக்கு பெண் குழந்தை பிறந்தது.

8) நான் சென்னையிலிருந்து கிளம்பி வந்தேன். 4 நாட்கள் எனது மனைவியை பார்த்துக்கொண்டேன். 17.2.2018ம் தேதி எங்களுக்கு முதல் திருமணநாள் வந்தது. திருமண நாளை மருத்துவமனையில்தான் கொண்டாடினோம். எனது அம்மா குழந்தையை பார்க்க மருத்துவமனைக்கு வந்திருந்தார் நான் நான்கு நாட்களாக மருத்துவமனையில் இருந்ததால் ஒரு நாள் ஊருக்கு சென்று வருகிறேன் என அனுமதி கேட்டேன் அப்போது எனது மனைவியும் அவரது அம்மாவும் என்னையும் எனது அம்மாவையும் தவறாக பேசினார்கள்.

9) அங்கு பிரச்சனையானது அவர்கள் அசிங்கமாக பேசியதால் நானும் எனது அம்மாவும் ஊருக்கு கிளம்பி சென்று விட்டோம். அன்று இரவு 11 மணி அளவிற்கு சின்னாளபட்டியில் உள்ள எனது மனைவியின் பெரியம்மா எங்களது வீட்டிற்கு வந்து பிரச்சனை செய்தார். அதனால் நாங்கள் மறுநாள் காலையில் சின்னாளப்பட்டி காவல் நிலையம் சென்று ஒரு புகார் எழுதிக் கொடுத்தோம். போலீசார் அங்கு விசாரணை செய்து எனது மனைவியின் பெரியம்மாவை இந்த

பிரச்சனையில் தலையிடக் கூடாது என சொல்லி எழுதி வாங்கிக்கொண்டு அனுப்பி விட்டார்கள்.

10) அதன் பிறகு மார்ச் மாதம் 2019 ஆம் வருடம் சென்னையில் புகார் கொடுத்து அங்கிருந்து போலீசாரை நான் வேலை செய்யும் இடத்திற்கு அழைத்து வந்து பிரச்சனை செய்தார். சென்னை மடிப்பாக்கம் காவல் நிலையத்தில் எனக்கு அழைப்பானை கொடுத்தார்கள் நான் சென்று ஆஜர் ஆனேன். சின்னாளப்பட்டிக்கு சேர்ந்து வாழ அழைத்தேன் எனது மனைவி வாழ மறுத்துவிட்டார். அதன்பிறகு திண்டுக்கல் சோசியல் வெல்ஃபேர் அலுவலகத்தில் எனது மனைவி கம்பிளைன்ட் செய்தார். அங்கும் ஆஜராகி நான் சேர்ந்து வாழ்வதாகத்தான் சொன்னேன். எனது மனைவி முடியாது என சொல்லிவிட்டு சென்றுவிட்டார்.

11) அதன் பிறகு போடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எனது மனைவி புகார் கொடுத்தார். அதில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள். குற்ற எண் 9/2019 என வழக்கு பதிவு செய்தார்கள்.போலீசார் என்னை விசாரித்தார்கள் எங்களது ஊரிலும் வந்து விசாரித்தார்கள் அதன்பிறகு அவர் கொடுத்த புகாரை மிஸ்டேக் ஆப் பேக்ட் என முடித்து விட்டார்கள். அதன்பிறகு முடிக்கப்பட்ட அந்த முதல் தகவல் அறிக்கை இது மேல்முறையீடு செய்து உயர்நீதிமன்றத்தில் உத்தரவு வாங்கி மீண்டும் வழக்கு விசாரணை செய்ய உத்தரவு பெற்றார்.

12) மீண்டும் அந்த வழக்கை காவல் ஆய்வாளர் விசாரித்து எங்களது வீட்டிற்கு வந்து விசாரித்துவிட்டு மீண்டும் அந்த புகாரை மிஸ்டேக் ஆஃப் ஃபேக்ட் என முடித்து விட்டார்கள். இந்த புகார் சம்பந்தமாக தேனி சோசியல் வெல்ஃபேர் அலுவலகத்திற்கு சென்று விசாரணை செய்தார்கள் அங்கும் எனது மனைவி கொடுத்த புகாரின் மீது உண்மையில்லை எனச் சொல்லி அறிக்கை கொடுத்துவிட்டார்கள். அதன்பிறகு எனது மனைவி என்மீது ஜீவனாம்சம் கேட்டு

இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் அந்த வழக்கு தேனி குடும்ப நல நீதிமன்றத்திற்கு மாறுதலாகி சென்று விட்டது.

13) அந்த வழக்கில் தீர்ப்பாகி நான் 18 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் கொடுத்தேன் மனுதாரர் தேனியில் உள்ள ஆக்சிஸ் வங்கியில் வேலை பார்த்து வரும் விபரத்தை மறைத்து உத்தரவு வாங்கியதால் அதன்மீது உயர்நீதிமன்றத்தில் முறையீடு செய்து தடை உத்தரவு பெற்றேன். நான் தாக்கல் செய்த வழக்கு நிலுவையில் உள்ளது. அதன்பிறகு நான் திண்டுக்கல் குடும்ப நல நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்திருந்தேன் அந்த வழக்கு தேனி மாவட்டத்தின் குடும்பநல நீதிமன்றத்திற்கு மாறிவிட்டது.

14) அதன்பிறகு எனது மனைவி என்னுடன் சேர்ந்து வாழ வேண்டுமென வழக்கு தாக்கல் செய்து அது ஒரு தலைப்பட்சமாக தீர்ப்பானது. அந்த தீர்ப்பிற்கு எதிராக நான் மனுசெய்து அது ரீவோப்பனாகி அதுவும் நிலுவையில் உள்ளது. எனக்கு கடன் அதிகமாகிவிட்டது அதனால் நான் இரண்டு வருடங்கள் வெளிநாட்டில் சென்று வேலை பார்த்தேன் அதனால்தான் அந்த வழக்குகளை என்னால் நடத்த இயலவில்லை தற்போது வெளிநாட்டில் வேலையை விட்டுவிட்டு வந்துவிட்டேன்.

| | |
|---|---|
| 1 | 16.10.2019ம் தேதியில் மனுதாரர் கொடுத்த புகாரின்பேரில் போடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ.1 ஆகவும் |
| 2 | 20.12.2021ம் தேதி மேற்படி முதல் தகவல் அறிக்கை Mistake of Fact என முடிக்கப்பட்ட இறுதி அறிக்கை சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ.2 ஆகவும் |
| 3 | 05.09.2019ம் தேதியிட்ட திண்டுக்கல் மாவட்ட சமூக நல அலுவலகத்தில் தகவல் அறியும் உரிமை சட்டத்தில் கேட்டு பெற்ற தகவல் அசல் எ.ம.சா.ஆ.3 ஆகவும் |
| 4 | 10.04.2026ம் தேதியிட்ட தேனி மாவட்ட சமூக நல அலுவலகத்தில் தகவல் அறியும் உரிமை சட்டத்தில் கேட்டு பெற்ற தகவல் அசல் எ.ம.சா.ஆ.4 ஆகவும் |
| 5 | 28.2.2018ம் தேதி சின்னாளப்பட்டி காவல் நிலையத்தில் எனது |

| | |
|---|---|
| | மனைவியின் பெரியம்மா மீது கொடுக்கப்பட்ட புகாருக்கு வழங்கப்பட்ட மனு ரசீது அசல் எ.ம.சா.ஆ.5 ஆகவும் |
| 6 | 19.3.2019ம் தேதியில் ஆஜராக சொல்லி மடிப்பாக்கம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட அழைப்பாணை அசல் எ.ம.சா.ஆ.6 ஆகவும் |

குறியீடு செய்ய வேண்டுகிறேன். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**(மேற்படி ஆவணங்கள் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**எதிர் மனுதாரர் தரப்பில் கூடுதல் ஆவணம் தாக்கல் செய்வதற்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down before me in Open Court, and read over to

the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.06.11 18:25:47 +0530

**Judicial Magistrate,**

**Bodinayakanur.**